**செ.வெ. எண்: 556** **நாள்: 24.09.2012**

**<u>செய்தி வெளியீடு</u>**

19.9.2012 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் தலைமையில் நடைபெற்ற காவேரி நதிநீர் ஆணையக் கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டில் டெல்டா மாவட்டங்களின் சம்பா சாகுபடி நிலைமையை விரிவாக எடுத்துக்கூறி, இடர்ப்பாடு பங்கீட்டு முறையின்படி குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு 2 டி.எம்.சி. அடி தண்ணீர் வீதம் 24 நாட்களுக்கு காவேரி தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தாலும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் வினாடிக்கு 9,000 கன அடி தண்ணீர் வீதம், அதாவது ¾ டி.எம்.சி. அடி தண்ணீரினை 20.9.2012 முதல் 15.10.2012 வரை கர்நாடகம் தமிழ்நாட்டிற்கு திறந்துவிட வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். இந்தத் தீர்ப்பு தமிழகத்திற்கு ஏற்புடையதாக இல்லை என்றாலும், இதனையும் திறந்துவிட கர்நாடக அரசு மறுப்பு தெரிவித்தது.

இந்தச் சூழ்நிலையில், காவேரியில் தமிழகத்திற்குரிய பங்கினை கர்நாடகம் திறந்துவிட உத்தரவு பிறப்பிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வது தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் இன்று தலைமைச் செயலகத்தில் விரிவாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு நிதியமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், பொதுப்பணித் துறை செயலாளர், காவேரி தொழில்நுட்பக் குழுவின் தலைவர், கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தின் முடிவில், காவேரியில் தமிழகத்திற்குரிய பங்கினை கர்நாடகம் திறந்துவிட உத்தரவு பிறப்பிக்கக் கோரும் மனுவினை உடன் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை**–9**
நாள்: 24.9.2012